**பாடம்: தமிழ் முதல் தாள் காலாண்டுத் தேர்வு – 2019 மதிப்பெண்கள்:100**
**வகுப்பு: பத்தாம் வகுப்பு காலம் : 2.30 மணிகள்**

## பகுதி – 1

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. 'வேர்க்கடலை மிளகாய் விதை மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை –
அ) குலைவகை ஆ) மணிவகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை
2. நும்பாடப்பகுதியில் அமைந்துள்ள முல்லைப் பாட்டு என்ற நூலை எழுதியவர்
அ) அப்பூதியடிகள் ஆ) நப்பூதனார் இ) சிங்காரம் ஈ) உ.வே.ச
3. பொருந்தும் விடைவரிசையைத் தேர்ந்தெடுக்க:
அ) கொண்டல் - 1. மேற்கு
ஆ) கோடை - 2. தெற்கு
இ) வாடை - 3. கிழக்கு
ஈ) தென்றல் - 4. வடக்கு
அ) 1 2 3 4 ஆ) 3 1 4 2 இ) 4 3 2 1 ஈ) 3 4 1 2
4. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்
5. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
6. நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா எனப் பாராட்டப்பெற்றவர்
அ) பாரதிதாசன் ஆ) சாமிநாத ஐயர் இ) வ.உ.சி ஈ) பாரதியார்
7. சுவல் என்பதன் பொருள் அ) மலை ஆ) தூவி இ) தோள் ஈ) நற்செயல்
8. மலைபடுகடாம் எத்தனை அடிகளைக் கொண்டது? அ) 383 ஆ) 583 இ) 483 ஈ) 183
9. காசிக்காண்டம் என்பது-
அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல் ஆ) காசிநகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல் ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி:**

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.

10. மேலுள்ள அடிகள் இடம்பெற்றுள்ள பாடல்
அ) மலைபடுகடாம் ஆ) பெருமாள் திருமொழி இ) திருவிளையாடற்புராணம் ஈ) புறநானூறு
11. மாயம் என்பதன் பொருள் அ) விளையாட்டு ஆ) பாடல் இ) தேடல் ஈ) புதிர்
12. இப்பாடலை எழுதியவர் அ) குலசேகராழ்வர் ஆ) கீரந்தையார் இ) கம்பர் ஈ) உ.வே.ச
13. இப்பாடலில் வந்துள்ள மோனையை எடுத்தெழுதுக.
14. இப்பாடலில் வந்துள்ள எதுகையை எடுத்தெழுதுக.

## பகுதி – 2

## பிரிவு – 1

**எவையேனும் ஐந்தனுக்கு விடையளி:**

15. இயந்திர மனிதன் பெப்பர் குறித்த ஏதேனும் இரண்டு கருத்துகளை எழுதுக.
16. அமில மழை எவ்வாறு ஏற்படுகிறது?
17. விருந்தோம்பல் குறித்து வள்ளுவர் கூறுவது யாது?
18. தமிழ்நாட்டு நெல்வகைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

19. வாடிக்கையாளர் சேவை குறித்து எழுதுக.
20. பூவின் நிலைகள் யாவை?
21. விடைக் கேற்ற வினா அமைக்க:

அ) 'இந்தியாதான் என்னுடைய மோட்சம்' என்று பாரதியார் கூறுகிறார்.

ஆ) 'புதிய உரைநடை' என்னும் நூலுக்காக மா.இராமலிங்கம் சாகித்ய அகாதெமி பரிசு பெற்றார்.

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்தனுக்கு விடையளி:**

22. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல்களாக பரிபாடல் குறிப்பிடுவன யாவை?
23. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாக பாவலரேறு கூறுவன யாவை?
24. பாரதியார் யாருக்கு பாட்டுகள் பாடுகிறோம் என்று கூறுகிறார்?
25. இல்லற ஒழுக்கம் என்பது எது?
26. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும்முகமன் சொற்களை எழுதுக.
27. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கனை எழுதுக.
28. 'மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே! …… இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள ஐம்பெருங் காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களை எழுதுக.

## பகுதி – 3

## பிரிவு 1

**எவையேனும் மூன்றனுக்கு விடையளி:**

29. விருந்தை எதிர்கொள்ளும் தன்மை குறித்துக் குறுந்தொகையும் கொன்றை வேந்தனும் பதிவு செய்துள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
30. சொல்வளம் குறித்து பாவாணர் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.
31. மனிதனால் நீர் எவ்வாறு மாசடைகிறது?
32. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்து எழுதுக.
33. மின்னணுப் புரட்சி குறித்து எழுதுக.

## பிரிவு 2

**எவையேனும் மூன்றனுக்கு விடையளி:**

34. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.
35. முல்லைப் பாட்டிலுள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.
36. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலை கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?
37. 'மாளாத காதல் நோயாளன் போல' என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்திகளை எழுதக.
38. வித்துவக்கோட்டம்மாளின் பெருமைகளாக குலசேகராழ்வார் கூறு;வன யாவை?

## பிரிவு 3

**அனைத்து நான்கனுக்கு விடையளி:**

39. பொருத்துக:

| | | |
|---|---|---|
| அ) பரிபாடல் | - | 1) தேவநேயப் பாவாணர் |
| ஆ) மலைபடுகடாம் | - | 2) அதிவீரராம பாண்டியர் |
| இ) காசிக் காண்டம் | - | 2) நப்பூதனார் |
| ஈ) முல்லைப்பாட்டு | - | 4) கீரந்தையார் |
| உ) தமிழ்ச் சொல்வளம் | - | 5) பெருஞ்சித்தனார் |

**40. உரைநடையைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி:**

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழைபொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக நடந்த இந்தப் பெரிய உலகத்தில் உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

அ) பத்தியில் உள்ள அடுக்குத்தொடர்களை எழுதுக.
ஆ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?
இ) பெய்த மழை - இத்தொடரை வினைத் தொகையாக மாற்றுக.
ஈ) இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது?
உ) உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழல் யாது?

**41. கீழ்க்காணும் சொற்களின் கூட்டப் பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.**

| சொல் | கூட்டப்பெயர் |
|---|---|
| அ) கல் | |
| ஆ) ஆடு | |
| இ) புல் | |
| ஈ) பழம் | |
| உ) சாவி | |

**42. பின்வரும் மனப்பாடல் செய்யுளை அடிபிறழாமல் எழுது**

சிறுதாழ்பு தொடுத்த ……………… எனத் தொடங்கும் முல்லைப்பாட்டை எழுதுக

**பகுதி – 4**

**விரிவாக விடையளி:**

43. அ) ஒழுக்கமுடைமை என்னும் அதிகாரத்தின் வாயிலாக வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

அல்லது

ஆ) மனோன்மணீயம சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலையும் பெருஞ்சித்தரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப் பேச்சு ஒன்றை உருவாக்குக.

44. அ) உயிராக நான் பல பெயர்களில் நான் நான்கு திசைகளிலும் நான் இலக்கியத்தில் நான் ….. முதலிய தலைப்புகளில் காற்று ……. முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றி பேசுவதாக நும் கற்பனை ஒன்றை வரைக.

அல்லது

ஆ) தமிழரின் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துக்களை எழுதுக.

# தி டேலண்ட் கோச்சிங் சென்டர் மகுடஞ்சாவடி

பாடசாலை